BRAMPTON Service and Information Update

# 2022 ஆம் வருடத்திற்கான உத்தேசிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் பற்றிய கருத்துக்களைக் கூற ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள், வியாபாரிகள் மற்றும் சமுதாயக் குழுக்கள் வரவேற்கப்படுகிறார்கள்

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 1, 2021) – நகரின் 2022 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் பற்றிய தங்கள் பின்னூட்டக்கருத்துகளைக் கூற ப்ராம்ப்ட்டன் குடியிருப்பு வாசிகள், வியாபாரிகள் மற்றும் சமுதாயக்குழுக்கள் வரவேற்கப்படுகிறார்கள்; இந்த வரவு செலவுத் திட்டம் நகரின் வலைத்தளத்தில் இந்த வாரம் முழுவதிலும் கிடைக்கப்பெறும்.

நவம்பர் 16, செவ்வாய்க்கிழமையன்று,

- காலை 9:30 மணிக்கு வணிகங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கான ஒரு மெய்நிகர் கூட்டத்தையும்;
- மீண்டும் அன்றையதினம் மாலை 6:45 மணிக்கு பொதுமக்கள் மற்றும் சமுதாயக்குழுக்களின் பிரதிநிதிகளுக்காக ஒரு டெலி டவுன்ஹாலையும்

வரவு செலவுத் திட்டக்குழு தலைவராகிய மேயர் பேட்ரிக் ப்ரவுன், வரவு செலவுத் திட்டக் குழுவினர் மற்றும் பிராந்திய கவுன்சிலரும் வரவு செலவுத் திட்டக்குழு உபதலைவருமாகிய பால் விசெண்ட், ஆகியோர் இணைந்து , நிகழ்த்துவார்கள்.

இரண்டு அமர்வுகளுக்கும் www.brampton.ca/budget எனும் வலைப்பக்கத்தில் இப்போது பதிவு செய்து கொள்ளலாம். இந்த இரு அமர்வின்போதும் நகர நிர்வாக அலுவலர்கள் கலந்துகொள்வார்கள்; பங்கேற்பாளர்கள் கேள்விகள் கேட்கலாம், முன்னுரிமை கொண்ட விஷயங்கள் எவை என எடுத்துரைக்கலாம்; இதன்மூலம் நகரின் 2022 க்கான வரவு செலவுத் திட்டமிடும் கலந்துரையாடலில் பங்கு பெறலாம்.

வரவு செலவு திட்டமிடும் கலந்துரையாடல் நவம்பர் 29, 2021 புதன்கிழமையன்று துவங்கும்; டிசம்பர் 8, 2021 புதன்கிழமையன்று வரவுசெலவு திட்டம் அங்கீகரிக்கப்படும். www.brampton.ca/budget எனும் வலைப்பக்கத்தில் நகரின் வரவு செலவு திட்டம் பற்றிய மேலும் தகவல்கள் கிடைக்கும்.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca